**இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல 2276 எஸ்ஆர்ஐ) 2010**

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்.

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினத்தை முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,348,188,529 ஆன செலவினத்துடன் ஒப்பிடப்படும் போது ரூபா 1,957,427,257 ஆக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போதான செலவினம் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2010 | 2009 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 1,028,018,879 | 2,177,518,588 | 4,617,798,960 |
| உபகரணங்களும் பொருட்களும் | 885,596,617 | 1,137,040,294 | 3,260,784,032 |
| வட்டிக் கட்டணங்கள் | 43,811,761 | 33,629,647 | 89,089,076 |
| மொத்தம் | 1,957,427,257 | 3,348,188,529 | 7,967,672,068 |

### 2.2 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிகளின் பயன்பாடு கீழே தரப்படுகின்றது.

| | **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **இலங்கை அரசாங்கம்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்** | **ஐ.அ.டொலர் மில்** | **ஐ.அ.டொலர் மில்** |
| உடன்பட்ட உதவுதொகை | 46.50 | 24.00 | 70.5 |
| கூட்டு: வெளிநாட்டு நாணயமாற்று வித்தியாசம் | 2.3 | - | 2.3 |
| குறைநிரப்பு ஏற்பாடு | - | 17.87 | 17.87 |
| | 48.8 | 41.87 | 90.67 |
| 2010 திசெம்பர் 31 வரை ஏற்பட்ட உண்மையான செலவினம் | 43.6 | 28.8 | 72.4 |
| சதவீதமாக நிதிகளின் பயன்பாடு | 89.34 | 68.78 | 79.85 |

## 2.3 கட்டு நிதிக் கணக்கு.

செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கத்தக்கதான மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ. அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2010 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 227,652 | 26,039,868 |
| கூட்டுக: வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | (495,582) |
| | 227,652 | 25,544,286 |
| கழி: பற்றுதல்கள் | 179,908 | 20,246,922 |
| 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 47,744 | 5,297,364 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டம் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, ஆரம்பத்தில் ஐந்து உப செயற்திட்டங்கள் ஐ.அ.டொலர் 70.3 மில்லியன் கிரயத்தில் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டன. எவ்வாறாயினும், ஒரு உப செயற்திட்டம் பின்னர் தவிர்க்கப்பட்டிருந்ததுடன் மீகுதி நான்கு உப செயற்திட்டங்களின் கிரயம் திருத்தப்பட்டிருந்தன. இதன் விளைவாக, செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் பிரதானமாக செயற்திட்டத்தின் அமுலாக்கலிலுள்ள தாமதம் காரணமாக 43.3 % ஆல் அதிகரித்திருந்தது. செயற்திட்ட முன்னேற்றம் மற்றும் கிரய விபரங்கள் என்பன பின்வருமாறுள்ளன.

| உப செயற்திட்ட இல | கிரயம் ஐ.அ.டொலர் மில்லியன் | | சதவீதமாக பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| | ஆரம்பம்- 2006 | திருத்தப்பட்டது | |
| எச்டபிள்யூ&ரீ/யூடபிள்யூஎஸ் பிஏ1/பீஏரீ/ஐசீபீ | 35.81 | 51.93 | 88.6 |
| பிடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ்/ பிசீ1/பீஏரீ/ஐசீபீ | 16.46 | 24.73 | 87.0 |
| பிடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ்/ பிசீ2/எச்ஏஎம்/ஐசீபீ | 7.94 | 11.0 | 98 |
| டிஆர்/யூடபிள்யூஎஸ்/ பிஜீ2/எம்யூரீ/என்சீபீ | 1.09 | 1.16 | 100 |
| வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் | 1.94 | 1.84 | |
| மொத்தம் | 63.24 | 90.66 | |

(ii) மட்டக்களப்பில் பிரதான வேலைகளின் நிர்மாணம், மூல நீர் பரிமாற்றம், பிரதானம் மற்றும் சுத்திகரிப்பு இயந்திரம் என்பன தொடர்புபட்ட ஒப்பந்தம் 2007 ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டிருந்ததுடன் பின்னர் பூர்த்தியாக்கல் திகதி 2011 மார்ச் மாதம் வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் 30 இல் உள்ளவாறு அந்த உப செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக முன்னேற்றம் 93 % மாத்திரமேயாகும். இரும்புக் வடிவ வேலைக் குறைவு, வளத் திட்டமிடல்